# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 07
**Tel:** 011 7920950, 0117920951**Fax:** 011 7920949
**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cpalanka.org


**பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2010**

**ஊடக அறிக்கை 03**

**23 மார்ச் 2010**

**18.00 மணி**

***கொழும்பு, இலங்கை,*** தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படல் தொடர்பாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தொடர்ந்தும் அறிக்கைகள் கிடைக்கப்பெறுகின்றன. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) மார்ச் 22 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்றுள்ள பாரிய வன்முறைச் சம்பவங்கள் 110 ல் 32(29%) அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் சம்பந்தமான முறைப்பாடுகளாகும்.

**எம்.ரி.வி/எம்.பி.சி ஊடக நிறுவனம் மீது தாக்குதல்**

நேற்று மார்ச் 22 ஆம் திகதி கொழும்பு 'பிறேபுறுக் பிளேஸில்' அமைந்துள்ள எம்.ரி.வி/எம்.பி.சி காரியாலயம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) முற்று முழுமையாக கண்டிக்கிறது. வன்முறையாளர்களை ஏற்றி வர பாவிக்கப்பட்ட இரு வண்டிகளில் ஒரு வண்டி களனி போக்குவரத்து டிப்போவிற்கு உரியதென தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) அறியக்கிடைத்துள்ளது. மார்ச் 22 ஆம் திகதி தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) கொம்பனி வீதி பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொண்ட போது பிரதான பொலிஸ் பரீட்சகர் மளின் பெரேரா கைது செய்யப்பட்டவர்களில் சில பேரின் வாக்கு மூலங்களில் தாக்குதல் நடாத்தியவர்களில் சிலர் ஐ.ம.சு.மு வேட்பாளர் துமின்த டி சில்வா(வேட்பாளர் இல 8) வின் ஆதரவாளர்களென குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார். துமிந்த டி சில்வா இக் குற்றச்சாட்டை முற்றுமுழுதாக நிராகரித்தார். இத் தாக்குதலுக்கான உந்துதல் என்ன என்பது கண்டறியப்பட வேண்டியுள்ள நிலையில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) தலைநகரத்தின் மத்தியில் பகல் நேர வேளையில் ஏலவே தாக்குதலுக்குள்ளான ஒரு ஊடக நிறுவனத்தின் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டுகின்றது. இத்தாக்குதல் குறிப்பாக பொதுத்தேர்தலொன்றுக்கான சூழல் ஒன்றில் தடையற்ற தகவல் பரிமாற்றத்தை, தகவல் பெறுவதற்கான பொதுமக்களின் உரிமை தொடர்பிலும் சட்டத்தின் ஆட்சி தொடர்பிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கெதிராக அச்சம் மற்றும் பக்கச் சார்பற்ற உடனடியானதும் செயல்விளைவு மிக்கதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அழைப்பு விடுக்கிறது.

**பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் தொடர்பான தொடரான முறைப்பாடுகள்.**

23 ஆம் திகதி மார்ச் பகல் 12.00 மணியளவில் பொத்துவில் அஸ்ரப் - அதாவுல்லா ஞாபகார்த்த மண்டபத்தில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான கூட்டமொன்று நடைபெற்றதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய (CMEV) களக் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய (CMEV) களக் கண்காணிப்பாளர் அறிக்கையின் படி ஐ.ம.சு.மு வேட்பாளர்களான ஏ.எச். அப்துல் பசீர்(வேட்பாளர் இல 03), ஏ.எம் லெப்பை(வேட்பாளர் இல 05) மற்றும் ஏ.எம் அதாவுல்லா(வேட்பாளர் இல 02) மற்றும் கிழக்கு மாகாண பாதை அபிவிருத்தி நீர்ப்பாசன வீடமைப்பு கட்டிட நிர்மாண கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் உதுமான் லெப்பை ஆகியோர் கூட்டத்தில் கலந்து உரையாற்றியுள்ளனர்.

பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்பதற்காக பொத்துவில் பிரதேசப் பாடசாலைகள் 23 ஆம் திகதி மார்ச் காலை 10.30 மணியளவில் மூடப்பட்டதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) அறியக்கிடைத்துள்ளது.

அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிமனை உதவிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்ட போது 23 ஆம் திகதி பாடசாலைகளை மூடுவதற்கான அனுமதி வழங்கப்படவில்லையெனவும் தனக்கு கிடைத்த தகவலின்படி கல்வி அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வீரவர்தன அவ்வாறான அனுமதியொன்று வழங்கப்பட வில்லையெனவும் இச் சம்பவம் தொடர்பாக தனக்கு தெரியாது எனவும் இவ்விடயம் தொடர்பில் தனது கவனத்தை செலுத்துவதாகவும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) தெரிவித்தார்.

**மன்னார்:** 22 ஆம் திகதி மார்ச் மன்னார் தேசிய இளைஞர் சபையின் ஆளணியினரையும் மற்றும் கட்டிடம் ஒன்றையும் மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த முகாமை சேவைகள் அமைச்சரும் ஐ.ம.சு.மு வேட்பாளருமான ரிசாட் பதூர்தீன்(வேட்பாளர் இல 01) தனது பிரச்சார நடவக்கைகளுக்கு பயன்படுத்துவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அறிக்கையிடப்பட்ட படி 22 ஆம் திகதி ரிசாட் பதூர்தீனின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கான கூட்டமொன்று அக் கட்டிடத்தில் இடம் பெற்றுதாக அறிவிக்கப்படுகிறது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) மன்னார் தேசிய இளைஞர் பேரவையை தொடர்பு கொண்ட போது பேரவையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் அத்தகையதொரு கூட்டம் நடைபெறவில்லையென தெரிவித்தார்.

ரிசாட் பதூர்தீனை தொடர்பு கொள்வதற்கான முயற்சிகள் பயனளிக்கவில்லை.

**யாழ்ப்பாணம்:** தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர் அறிக்கையின் படி ஐ.ம,சு.மு இன் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளரான அலெக்சாண்டர் சார்ள்ஸ்(வேட்பாளர் இல 04) கச்சை அரசாங்க தமிழ் கலவன் பாடசாலையில் மார்ச் 18 ஆம் திகதி பகல் 01.30 அளவில் கூட்டமொன்றை நடத்தியுள்ளார்.

அலெக்சாண்டர் சார்ள்ளை இது தொடர்பில் தொடர்பு கொண்ட போது குற்றச்சாட்டை முழுமையாக மறுத்தார்.

**நுவரெலியா:** 17 ஆம் திகதி மார்ச் குற்றம் சுமத்தப்பட்ட, வகையில் இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஐ.ம.சு.மு வேட்பாளருமான ஆறுமுகம் இராமநாதன் தொண்டமான்(வேட்பாளர் இல 10) பத்தனை கல்வியியற் கல்லூரியில் கூட்டமொன்றை நடாத்தியுள்ளார்.

அரசாங்கப் பாடசாலையை சேர்ந்த 5 அதிபர்களும் கல்வியியற் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியப் பயிலுனர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) அறியக்கிடைத்துள்ளது. இதில் 3 அதிபர்கள் முறையே பாரதி மகா வித்தியாலயம், ஹைலன்ஸ் மத்தியக் கல்லூரி மற்றும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்களாக இனம் காணப்பட்டுள்ளனர்.

கொட்டக்கலை பிரதேச சபைக்குச் சொந்தமான லொரியொன்று(CP PA 5267) ஐ.ம.சு.மு வேட்பாளரான சாந்தினி சந்திரசேகரன் (வேட்பாளர் இல 09) இன் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதாக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் (CMEV) களக் கண்காணிப்பாளர் அறிவித்துள்ளார். மலையக மக்கள் முன்னணியின் கொட்டக்கலை பிரதேச சபை அங்கத்தவர் ஒருவரான என்.சதாசிவம் இக் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்தார்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) தேர்தல் ஆணையாளரினால் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களை வரவேற்கிறது. மேலும் அரசியலமைப்பின் 17 வது சீர் திருத்தச் சட்டத்தின் பிரிவு 104 ஆ(4) (அ) வின் உறுப்புரையை அடையாளப்படுத்துகிறது:

***தேர்தல் ஆணைக்குழு தேர்தல் ஒன்றின் பொழுது அரச மற்றும் ஏதேனுமொரு பொது கூட்டுத்தாபனமொன்றிற்கு சொந்தமான அசையும் அசையா சொத்துக்களை பாவிப்பதை தடுப்பதற்கான அதிகாரத்தை கொண்டுள்ளது.***

தேர்தல் நடைமுறைகளின் நேர்மைத் தன்மையை பாதுகாத்து உறுதிப்படுத்துவதற்காக வேண்டி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக பயன்படுத்துமாறு ஆணையாளருக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

மார்ச் 22 ஆம் திகதி வரையில் 110(64%) பாரிய வன்முறைச் சம்பவங்கள் உள்ளடங்கலாக 170 மொத்த தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV) பதிவு செய்துள்ளது . துப்பாக்கிப் பாவனை தொடர்பான சம்பவங்கள் 31(28%) ஆக அதிகரித்துள்ளன.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 22 பாரிய வன்முறைச் சம்பவங்களை மத்திய மாகாணத்திலிருந்தும், 17 பாரிய வன்முறைச்சம்பவங்களை வடமேல் மாகாணத்திலிருந்தும், 16 பாரிய வன்முறைச் சம்பவங்களை சப்ரகமுவ மாகாணத்திலிருந்தும், 12 பாரிய வன்முறைச் சம்பவங்களை கிழக்கு மாகாணத்திலிருந்தும், 11 பாரிய வன்முறைச் சம்பவங்களை ஊவா மாகாணத்திலிருந்தும், 09 பாரிய வன்முறைச் சம்பவங்கள் தென் மாகாணத்திலிருந்தும், தலா 8 பாரிய வன்முறைச் சம்பவங்கள் வீதம் மேல் மற்றும் வட மாகாணங்களிலிருந்தும் 7 பாரிய வன்முறைச் சம்பவங்களை வட மத்திய மாகாணத்திலிருந்தும் உறுதிப் படுத்தியுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) ஐ.ம.சு.மு விற்கு எதிராக 127 முறைப்பாடுகளை பதிவு செய்திருக்கிறது. அவற்றுள் 25 அக்கட்சி அங்கத்தவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஐ.தே.க 7 சம்பவங்களின் போது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 35 சம்பவங்களின் பொழுது வன்முறைகளை மேற்கொண்டவர்களின் கட்சி அறியப்படவில்லை.

பதுளையில் போட்டியிடுகின்ற சுயேட்சை குழுவொன்றிற்கெதிராக ஒரு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருக்கிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் ( CPA) 1997 ம் ஆண்டு தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV) ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திரமாகவும் பக்கசார்பற்ற வகையிலும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்க சுதந்திர ஊடக இயக்கமும் (FMM) இணைந்துகொண்டது. தற்போது தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் (CMEV), மாற்றுக் கொள்கைக்கான நிலையம் (CMEV) சுதந்திர ஊடக இயக்கம் (FMM), மற்றும் INFORM மனித உரிமைகள் ஆவணப்படுத்தும் நிலையம் ஆகியவற்றின் பங்களிப்புடன் இயங்கிவருகின்றது.



கலாநிதி பா.சரவணமுத்து
இணை-அழைப்பாளர்



சுனில் ஜயசேகர
இணை-அழைப்பாளர்



உதய கலுபதிரண
இணை-அழைப்பாளர்